# சென்னை மாநகராட்சி



## வளர்ச்சிப் பாதையின் தொடர் பயணம்...






## இரண்டாம் ஆண்டு சாதனை மலர்

அக்டோபர் - 2008




சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் முதன்மை மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினியை மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.



இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆண்கள் சுயஉதவிக்குழக்களுக்கு சுழல் நிதி வழங்கினார்.

# சென்னை மாநகராட்சி

# வளர்ச்சிப் பாதையின் தொடர் பயணம் ........

இரண்டாம் ஆண்டு சாதனை மலர்

அக்டோபர் - 2008



பட்டினப்பாக்கம் எம்.ஆர்.சி. நகரில் புதிய பூங்கா

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | வாழ்த்துச் செய்தி - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் | 4 |
| 2. | வாழ்த்துச் செய்தி - மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் | 6 |
| 3. | முன்னுரை - வணக்கத்திற்குரிய மேயர் | 8 |
| 4. | சென்னை மாநகராட்சி-வளர்ச்சி பாதையின் தொடர்பயணம் | 10 - 50 |
| 5. | மாநகராட்சி குறித்து தலைவர்களின் கருத்துக்கள் | 51 |
| 6. | சென்னை மாநகராட்சி பெற்ற விருதுகள் | 55 |
| 7. | அழைக்கிறது சென்னை மாநகராட்சி | 56 |
| 8. | கல்வித்துறை | 57 |
| 9. | சுகாதாரத்துறை | 63 |
| 10. | கட்டடம் | 68 |
| 11. | பூங்காக்கள் | 70 |
| 12. | பாலங்கள் | 73 |
| 13. | சாலைகள் | 76 |
| 14. | பேருந்து சாலைகள் | 78 |
| 15. | இயந்திரப் பொறியியர் துறை | 79 |
| 16. | மழைநீர் வாடிகால்வாய் - மின்துறை | 81 |
| 17. | வருவாய்த்துறை | 83 |
| 18. | திடக்கழிவு மேலாண்மைத்துறை | 84 |
| 19. | நகரமைப்பு | 85 |
| 20. | சிறுசேமிப்புத்துறை | 86 |
| 21. | பொதுத்துறை | 87 |
| 22. | மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் | 88 |



**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

# வாழ்த்துச் செய்தி

நாள் : 23.10.2008

சென்னை மாநகராட்சி - மாமன்றத்தின் இரண்டாம் ஆண்டு 28.10.2008 அன்று நிறைவு பெறுவதையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடப்படுவது அறிந்து மகிழ்கிறேன்.

வரலாற்றுப் பெருமையையும், 320 ஆண்டுகளுக்கு மேலான பழைமையையும் கொண்டுள்ள சென்னை மாநகரம் இந்தியாவின் இதர மாநிலங்களையும், உலக நாடுகளையும் இணைத்திடும் கப்பல், விமானப் போக்குவரத்து வசதிகளுடன், இரயில், சாலை வசதிகளையும் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது. புறநகர்களில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிடும் பிரம்மாண்டமான பல தொழிற்சாலைகளையும் பெற்றுள்ள இம்மாநகரில் இன்று 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

இம்மக்களின் நல்வாழ்விற்கும், மாநகரின் மேம்பாட்டிற்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உலகத்தரத்திற்கு இணையாக உருவாக்குவதில் சென்னை மாநகராட்சி, 1996-2001 ஆண்டுகளில் சாதனைகள் படைத்தது போலவே, 2006க்குப் பின்னும் போக்குவரத்துகளைச் சீர்ப்படுத்திட முக்கியச் சந்திப்புகளில் மேம்பாலங்கள் கட்டப்படுகின்றன. பூங்காக்கள் எழிலூட்டப்படுகின்றன, மழைநீர் வடிகால்கள் தூர்வாரித் தூய்மை செய்யப்படுகின்றன, ஏழை எளிய குழந்தைகள் பயிலும் மாநகராட்சிப் பள்ளிகளின் கல்வித்தரம் பாராட்டத்தக்க வகையில் உயர்த்தப்படுகிறது, மருத்துவ வசதிகள், மின் வசதிகள், கழிவுநீர் அகற்றும் பணிகள் முதலிய பணிகளும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, சென்னை-சிங்காரச் சென்னையாக உருவெடுத்து வருகின்றது.

இவற்றின் காரணமாக இந்தியாவின் சிறந்த மாநகராட்சி என சென்னை மாநகராட்சி மத்திய அரசின் விருதினை ஏற்கனவே பெற்றுள்ளது. இத்தகைய பெருமைகளுடன் இம்மாநகராட்சி வெளியிடும் இரண்டாம் ஆண்டுச் சாதனை மலர் மாமன்றத்தின் பெருமை போற்றி வெளிவர என் உளமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**(மு. கருணாநிதி)**



**திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மு.க. ஸ்டாலின்**
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் : 22.10.2008

## வாழ்த்துச் செய்தி

சென்னை மாநகராட்சியில் புதிய மாமன்றம் பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலம் நிறைவுபெறுவதையொட்டி சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிப் பாதையில் இரண்டாவது ஆண்டு சாதனை மலர் வெளியிட உள்ளது அறிந்து மகிழ்ச்சி.

320 ஆண்டுகள் பழமை வாய்ந்த சீர்மிகு சென்னை மாநகராட்சியின் அதிவேகச் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தமிழக அரசு அளப்பரிய ஆலோசனைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், நிதி ஆதாரங்களையும் தொடர்ந்து தொய்வின்றி அளித்து வருகிறது.

சென்னை மாநகராட்சி, பணிகளில் தொடர்ந்து சிறந்த சாதனைகள் புரிந்திடவும், சென்னை மாநகராட்சி உலக அளவில் உன்னத மாநகராட்சியாகத் திகழவும், இச்சாதனை மலர் சிறக்கவும் என் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மு.க. ஸ்டாலின்)**



**மா. சுப்பிரமணியன்**

மேயர், சென்னை மாநகராட்சி

## முன்னுரை

2006-07ல் இந்தியாவின் சிறந்த மாநகராட்சிக்கான 'க்ரிசில்' விருதும், ஒரேநாளில் 155 வட்டங்களில் மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்து 'லிம்கா சாதனை' புத்தகத்தில் இடமும், பள்ளி எய்ட்ஸ் கல்வித் திட்டத்திற்காக உலகத் தலைமைப் பண்பிற்கான விருதும் (World Leadership Award) லண்டன் மாநகரில் பெற்று, இந்தியாவின் அனைத்துப் பெரிய மாநகராட்சிகளில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்று செம்மாந்து நடைபோடும் சென்னை மாநகராட்சியின் இரண்டாம் ஆண்டு சாதனை மலர் வெளியிடப்படுகிற இந்த நேரத்தில் சென்னை மாநகராட்சியின் 'மேயர்' என்ற பொறுப்பினை, எந்தவொரு குடிப்பெருமையும் இல்லாத இந்த எளியவனுக்குத் தந்து மக்கள் பணி செய்ய என்னைப் பணித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், தலைவர், கலைஞர் அவர்களுக்கும், இந்த நல்லாட்சியில் உள்ளாட்சி நிர்வாகத்தை உலகினர் வியக்கும் வண்ணம் திறம்பட நிர்வகிக்கும் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் என் நன்றியினைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் திகழும் அளவுக்குச் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்பாட்டில் வைத்து, தன்னுடைய நிர்வாகத் திறமையால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நாள்தோறும் அறிவித்து, செயல்படுத்த ஆலோசனைகள் வழங்கி, செயற்பாடுகளைக் கூர்ந்து கவனித்து, நிறை குறைகளைத் தானே ஆய்வு செய்து, ஏழை எளிய மக்கள் பயனாளிகளாக மாறுவதைப் பார்த்து, அதில் மட்டுமே மகிழ்ச்சியுறும் நமது தமிழக முதல்வர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி,

தமிழகம் முழுவதும் அயராது தேனீ போல் சுழன்று சுழன்று சுற்றி வந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான சுழல் நிதியைத் தானே நேரில் சென்று வழங்கி, ஏழை எளிய மக்களின், சிறப்பாக மகளிரின் உள்ளத்தில் இடம் பிடித்த மகத்தான தளபதியாக, இன்றைய இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, தமிழகத்தின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் அமைச்சராக இருந்தாலும், சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறை வளர்ச்சியிலும், நாட்டம் கொண்டு அரிய ஆலோசனைகள், நிதி ஆதாரங்கள் அளித்து அரவணைப்பவராகவும், எனது வணங்குதலுக்குரியவராகவும் விளங்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு,

சென்னை மாநகராட்சி, இரண்டாம் ஆண்டு சாதனை மலரைப்படைத்திருக்கிறது.

"ஊரும் உள்ளமும் தூய்மையானால் - உன் பேரும் பெருமையும் வாய்மையுறும்"

என்ற டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவுரையினை உள்ளத்தில் இருத்தி, இந்த நெடிய பயணம் தொடர்ந்து நடந்து கொண்டுள்ளது. இந்தத் தருணத்தில், இரண்டாம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மேற்கொண்ட திட்டங்கள், செயற்பாடுகள் போன்றவற்றில் சில துளிகளை எடுத்துக் கூறுவது, என் பொறுப்பின் கடமை என்று நினைத்துக் குறிப்பிடுகிறேன்.

சென்னை மாநகராட்சி உருவாகி 320 ஆண்டுகள் ஆகின்றது. 320வது ஆண்டு விழாவில் உரையாற்றிய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், அடுக்கிக் கூறிய புள்ளி விவரங்கள் என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. அவ்விழாவில் வாழ்த்துரை வழங்கிய அனைத்துத்துறை வல்லுநர்களும், மாநகராட்சியின் தற்போதைய செயற்பாடுகளைப் பாராட்டி சிறப்பிக்க மறக்கவில்லை. பல்துறை அறிஞர்களும் இம்மாமன்றச் செயற்பாடுகளைக் கூர்ந்து பார்க்கிறார்கள் என்பதை எண்ணி, நான் மிகவும் மகிழ்கிறேன். அவர்களுக்கு இதயநிறை நன்றியை உரித்தாக்குகின்றேன்.

"மக்களைத் தேடி மாநகராட்சி" முகாம் மூலம், ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் அனைத்துத் துறைகளின் சேவைகள் வழங்கப்பட்டு மக்கள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை இணையதளம் மூலம் இலவசமாகப் பெறும் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்தியாவில் முதன் முறையாகச் சென்னை மாநகராட்சியில், அமரர்களைக் கொண்டு செல்ல மற்றும் பாதுகாக்க குளிர்சாதனப்பெட்டி, மேலும் மயானங்களில் அமரர்களைப் புதைப்பதும், எரியூட்டுவதும் இலவசமாக்கப்பட்டுள்ளன.

மயான உதவியாளர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

10ஆம் வகுப்பு மற்றும் +2 வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு இலவச நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாநகராட்சி மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்குப் 'பரிசுப்பை' வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கோயம்பேடு பஸ் நிலையம் எதிரே ஜெய் நகரில் நவீனப் பூங்கா உள்ளிட்ட புதிய 70 பெரிய பூங்காக்கள் ரூ.10 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

மயான பூமிகளில், புல்தரை அமைத்து எழிலூட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உஸ்மான் சாலை - மகாலிங்கபுரம் சாலை மேம்பாலம் மற்றும் தியாகராய நகர் உஸ்மான்சாலை - துரைசாமி சாலை மேம்பாலம் ஆகியவை கட்டி முடித்துத் திறக்கப்பட்டுள்ளன.

12ம் வகுப்பில் பள்ளி முதன்மை பெற்ற மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட, மேல் படிப்புக்கான ஊக்கத் தொகைகள், இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன. 10ம் வகுப்பில் முதன்மை பெற்ற 26 மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலே கூறிய அனைத்தும், இரண்டாம் ஆண்டு சாதனைகளில் சில துளிகள் தான். இந்தச் சாதனைகள் மேலும் தொடர்ந்திட தமிழக முதல்வர் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தளபதி அவர்களின் கனவை நனவாக்கி சென்னை மாநகரை மேலும் உயர்த்த சபதமேற்போம்.

**மேயர்**

**சென்னை மாநகராட்சி**

# சென்னை மாநகராட்சி
# வளர்ச்சிப் பாதையின் தொடர்பயணம்...........

முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் எண்ண ஓட்டத்திற்கேற்ப எழுச்சியோடு செயல்பட்டும்,

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையில் உன்னதமான திட்டங்களைத் தீட்டி ஓய்வறியாப் பகலவனாய், தமிழகம் முழுவதும் சுற்றி வந்து சுழன்று சுழன்று ஏழை, எளிய மக்களுக்காகப் பாடுபட்டும் வருகின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆழ் மனதில் பின்னிப் பிணைந்துள்ள சென்னை மாநகராட்சி, தனது இரண்டாம் ஆண்டு சாதனை மலரை (2008) மலர வைத்துள்ளது.

மலரின் நறுமணத்தை நுகர்வதன் முன் மலரின் இதழ்களின் செழுமை, மென்மை, வண்ணம் போல் காட்சி தரும் அனைத்துத் துறைகளின் அதிவேகச் செயற்பாடுகளின் அடையாளங்களாக, ஆதாரங்களாக, வரலாற்றுப் பெட்டகங்களாக விளங்கும்

வண்ண வண்ணப் படங்களைப் பார்த்து இரசித்தும் ................
சாதனைகளை நுகர்ந்து மகிழ்ந்தும் ................

– வாழ்த்திட –

அனைவரையும் அழைப்பதில்
பெருமிதம் கொள்கிறது
சென்னை மாநகராட்சி.

'இன்றைய குழந்தைகள் நாளைய மன்னர்கள்' அக்குழந்தைகள் நல் ஆரோக்கியத்துடன் பிறந்திட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நிதி உதவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.



சென்னை மாநகராட்சி மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்குக் குழந்தை பிறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்பும், பின்பும் மாதந்தோறும் ரூபாய் 1000/– என ரூ.6 ஆயிரம், 59,219 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 20 கோடியே 80 லட்சத்து 28 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

நெரிசல் குறைந்திட, பயணம் எளிதாக அமைந்திட வழிவகுக்கும் தியாகராயநகர் உஸ்மான் சாலை–துரைசாமி சாலை மேம்பாலத்தினைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.




சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சீர்மிகு ஆலோசனைப்படி 15 மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாநகராட்சிப் பள்ளி மாணவச் செல்வங்கள் 'ஏழ்மை' என்னும் தடைக்கற்களைக் கடந்து மேற்படிப்பினைத் தொடர்ந்து, வாழ்வு சிறக்க ஊக்கத் தொகைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்கள்.



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவச் செல்வங்களின் மேற்படிப்புத் தொடர்ந்திட ஆண்டுதோறும் ரூ.9 இலட்சம் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மேற்படிப்புச் செலவினை மேற்கொள்வது சென்னை மாநகராட்சி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பார்வைக் குறைவால் படிப்பு பாதிக்கக் கூடாது என்ற நோக்கோடு மாநகராட்சி மாணவர்களின் கண்கள் பரிசோதிக்கப்பட்டுத் தேவைப்பட்டோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.



மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்குக் கண் பரிசோதனை மேற்கொண்டு 1700 மாணவர்களுக்குக் கண் பார்வைக் குறைபாடுகளைச் சரி செய்ய, சென்னை மாநகராட்சி மூலம் இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கள்ளங் கபடமற்ற பள்ளி மாணவர்களின் உள்ளத்தைக் காக்க இருதய அறுவை சிகிச்சைக்கான நிதி உதவியினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்கள்.



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டதில் போதிய பொருளாதார வசதியில்லாதவர்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டு தலா ரூபாய் 50,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் இந்தச் செயல் அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

சமுதாயக் கல்லூரிகளில் பயிற்சிகள் முடித்திடும் மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்புக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்கள்.



சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளில் குறுகிய காலத்தில் பயிற்சிகளை முடித்து பல உயர் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்று மாநகராட்சி மூலம் 95 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர்.

நானிலம் நிறைந்த நல்லறிவை ஊட்டிடும் நடமாடும் நூலகத்தை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் திறந்து வைத்து மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுடன் பார்வையிடுகிறார்.



சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பல்வேறு அரிய கருத்துக்களை அறிந்திடும் வகையில் நடமாடும் நூலகம், தொண்டு நிறுவன ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டு, இதுநாள் வரை 50,000த்திற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் பயன் பெற்றுள்ளனர்.

மாநகராட்சிப் பள்ளிகளில் உருது ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு அதற்கான, ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்கள்.



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மொழிகளோடு உருது மொழியும் கற்றுக்கொடுக்கப் படுகிறது.

மயான உதவியாளர்கள் சமூக ரீதியாக மேம்பட்டிட மாநகராட்சியில் நிரந்தரப் பணியாளர்களாகப் பணிபுரிந்திட ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.




சென்னை மாநகராட்சியில் உள்ள 38 மயானங்களில் பணிபுரியும் உரிமம் பெற்ற 183 வெட்டியான்கள் மாநகராட்சியின் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மயான உதவியாளர்கள் என்று அழைக்கப்படுவதுடன் புதிய சீருடைகள், காலணிகள், கையுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சமூகச் சீர்திருத்தம் இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது.

எங்கும் கணிப்பொறி, எதிலும் கணிப்பொறி என்ற நிலைக்கேற்ப மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவச் செல்வங்களுக்குக் கணினிப் பயிற்சிகள் வழங்க மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி வழங்கும் திட்டத்தினை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிடுகிறார்.



சென்னை மாநகராட்சித் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 2000 ஆசிரியர்களுக்கு 'எல்காட்' மூலம் ரூ.50 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சித் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை மற்றும் மண்டல மையப் பள்ளிகளுக்கு ரூ.3 கோடி செலவில் 844 கணினிகள் வாங்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளன.

சிறந்த மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் உள்ளம் விரிவடைந்து வெவ்வேறு மாநிலக் கலாச்சாரங்களை நேரில் அறிந்து கொள்ளும் வகையில் சுற்றுலாவாகச் சென்ற மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியரை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.




சுற்றுலாச் செல்வதன் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படுவதுடன், பலதரப்பட்ட மக்களோடு கலந்து பழகும் வாய்ப்பும், அவர்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் அறிய மாநகராட்சிப் பள்ளி மாணவ/ மாணவியர்களுக்குக் கல்விச் சுற்றுலா வட மாநிலங்களான புதுடில்லி, ஆக்ரா, சிம்லா போன்ற பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு ரூ.3.17 இலட்சம் செலவில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மக்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்திட மாநகராட்சி மருத்துவமனைகளில், மருத்துவர்களை நியமிப்பதற்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.



சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையில் மக்கள் பணி சிறந்திட, காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் போன்ற பல்வேறு பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உலகை அறிந்து வென்றிட மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்குவதை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிடுகிறார்.



ஆங்கில மொழியினை மாநகராட்சிப் பள்ளி 6,7,8 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்கள் எளிய நடையில் பேசிப் பழகிட ஏதுவாக அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளிலும் சிறந்த நிறுவனங்கள் மூலம் ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சியின் மூலம் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

'பல் இல்லை என்றால் சொல் இல்லை' என்பதனால் மாநகராட்சிப் பள்ளி மாணவர்களின் பல்வேறு வகையான பல் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்திடும் பல் சிகிச்சை முகாமினை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்துப் பார்வையிடுகிறார்கள்.



சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குச் சொத்தைப் பல், பற்சிதைவு மற்றும் அனைத்துப் பல் சம்மந்தப்பட்ட குறைபாடுகளையும் சிறப்புப் பல் மருத்துவ முகாம்கள் மூலம் இலவசமாக உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஏழை, எளிய மக்கள் பயன் பெற்றிட நவீன முறையில் அமைக்கப் பெற்றுள்ள சென்னை மாநகராட்சிப் பகுப்பாய்வுக் கூடங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார்கள்.



சென்னை மாநகராட்சி சார்பில் பகுப்பாய்வுக் கூடங்கள் ரூ.40 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் சிறந்த மருத்துவச் சிகிச்சைகள் பெற்றிட வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அலைந்து திரிந்து அல்லல்பட்டு வாங்கிய காலம் போய் மாநகராட்சி மருத்துவமனைகளில் பிறந்த 24 மணி நேரத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தினை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.



பொதுமக்களின் அலைச்சலைக் குறைத்திட மாநகராட்சி மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 24 மணி நேரத்தில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அனைத்து மாநகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சி முன்னோடியாக விளங்குகின்றது.

சென்னை மாநகரில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தினைத் துவக்கி வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறப்புச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.



பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்குப் பொதுமக்கள் சிரமப்படுவதாலும், சில நேரங்களில் இடைத்தரகர்களிடம் அதிகப் பணம் செலவிட நேரிடுவதாலும் மக்கள் அவதிக்குள்ளாவதைக் கருத்தில் கொண்டு, இனி சென்னை மாநகராட்சியின் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாகப் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் சிறப்பான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாகச் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்குப் 'பரிசுப்பை' வழங்கும் திட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, பரிசுப்பை வழங்கினார்கள்.



சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்கும் பொருட்டு ஒரு புத்தாடை, டவல், சோப்பு, பவுடர் முதலியவை தாய் உள்ளத்துடன் வழங்கி சென்னை மாநகராட்சி வருங்கால மன்னர்களை வரவேற்கிறது.

வீட்டில் இருந்தே பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை இணையதளம் மூலம் இலவசமாகப் பெறும் திட்டத்தினைத் துவக்கி வைத்துப் பார்வையிடுகிறார் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.



பொதுமக்களுக்கு ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகவும், எளிதில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை உலகின் எப்பகுதியிலிருந்தும் இலவசமாக எடுத்துக் கொள்ளவும் www.chennaicorporation.gov.in என்ற இணையதளத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோரின் குறைகள் உருக்கமுடன் கேட்கப்பட்டு அவர்களின் வாழ்வில் ஒளியூட்டும் நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படுகின்றன.



சென்னை மாநகராட்சியின் மூலம் முதன்முறையாக ஊனமுற்றோர்களின் குறைகள் கேட்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டன.

"வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை மாநகராட்சி" என்று எண்ணும் வகையில் குளிர்சாதன அமரர் பெட்டிகள், அமரர் ஊர்திகள் இலவசமாக வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்து மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிடுகிறார்.



இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்காக மின் குளிர்சாதன அமரர் பெட்டிகள் பெற்றிட பொதுமக்கள் அதிகத் தொகை செலவிட நேரிடுகிறது என்பதனை உணர்ந்து, சென்னை மாநகராட்சி 30 பகுதி அலுவலகத்திற்கும் ஏழை, எளிய மக்கள் இலவசமாகப் பயன்பெறும் வகையில் 30 மின் குளிர்சாதன அமரர் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 10 மண்டலத்திற்கும் தலா ஒன்று வீதம் 10 அமரர் ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டு இலவசமாகப் பொதுமக்கள் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளன.

வசதி நிறைந்த தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாகச் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளின் குளுகுளு அறைகளில் குழந்தையை ஈன்றெடுக்கும் வசதி.



பிரசவ காலத்தில் தாய்மார்களுக்கு ஏற்படக்கூடிய தொற்றுநோயைக் குறைக்கவும், சோர்வைத் தவிர்க்கவும், கோடை வெயிலின் தாக்கத்தைத் தவிர்க்கவும் 10 மாநகராட்சி மகப்பேறு நிலையங்களில் உள்ள பிரசவ அறைகள் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டு தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக மாநகராட்சி மருத்துவமனைகளிலும் குளுகுளு அறையில் குழந்தைகளை ஈன்றெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை சைதாப்பேட்டையில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத நவீன ஆட்டிறைச்சிக் கூடத்தைத் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.



வில்லிவாக்கத்தில் ரூ.35 இலட்சத்திலும், சைதாப்பேட்டையில் ரூ.40 இலட்சத்திலும் நவீன ஆட்டிறைச்சிக் கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பணியின்பொழுது இறந்த மாநகராட்சிப் பணியாளர்களின் குடும்பங்களில் நம்பிக்கை ஒளியூட்ட அவர்தம் 2025 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.



சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு மூன்று கட்டங்களாக மொத்தம் 2765 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

நோய்த் தடுப்புப் பணியாம் தீவிர கொசு ஒழிப்புப் பணியினை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.




பணியாளர்கள் அணுக முடியாத நீர் வழிப்பாதைகளில் படகுகள் மூலம் மருந்து தெளிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 115 கைத்தெளிப்பான்கள் வாங்கப்பட்டு இருப்பிடங்கள் மற்றும் உட்புறச் சாலைகளில் புகையடிக்கும் பணி நடைபெறுகிறது.

சென்னை மாநகரின் ஆரோக்கியத்திற்கும், அழகிற்கும் கேடு பயக்கும் குப்பைகளை நவீன முறையில் அகற்றுவதற்காகக் 'காம்பாக்டர்' வாகனங்களை வழங்கி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.



80 வாகனங்கள் ரூ.19 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 2100 உயர் அடர்த்தி பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் ரூ.2.67 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒதுக்கித் தள்ளிய குப்பைகளிலிருந்து மீண்டும் பயனளிக்கும் பொருட்களை உருவாக்கிட சைதையின் 140–வது வார்டில் ஒவ்வொரு வீட்டிற்கும், தரம் பிரித்துக் குப்பைகளை வழங்குவதற்காக வாளிகளை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் வழங்கினார்கள்.



தரம் பிரித்தல் எனும் தாரக மந்திரத்தை அனைவரின் மனதிலும் நிரந்தரமாய்த் தங்க வைக்கவும், ஒவ்வொரு வீட்டிற்கும் தலா இரண்டு குப்பை வாளிகள் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

எழில்மிகு சென்னையில் களப்பணி மேற்கொள்ளும் களப்பணி அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான சீருடைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.



துப்புரவுப் பணியாளர்களுக்கு நவீன வடிவமைப்புடன் கூடிய ஒரே மாதிரியான சீருடை தேசியப் புதுமை தொழில்நுட்பக் கழகம் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது துப்புரவுப் பணியாளர்களுக்கு இரண்டு ஜோடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சித் தொடர்பான புகார்களுக்கு 1913 என்ற எண்ணைப் பொதுமக்கள் தொடர்பு கொள்ள மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.




சென்னை மாநகராட்சிக் கட்டடம் 1913ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதனை நினைவு கூரும் வகையில் பொதுமக்கள் மாநகராட்சித் தொடர்பான புகார்களைத் தெரிவித்திட 1913 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அண்ணாசாலையில் விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டு அண்ணா மேம்பாலத்தை முழுவதுமாகக் கண்டிடவும், போக்குவரத்துச் சீராக நடைபெற்றிடவும், உயர்கோபுர மின்விளக்குகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இயக்கிவைத்தார்கள்.



சென்னை அண்ணாசாலையில் விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டு விபத்துகள் தடுக்கப்பட்டுள்ளன. போக்குவரத்திற்கான இடையூறுகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. உயர்கோபுர மின்விளக்குகள் மூலம் சாலைகள் ஒளியூட்டப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்திட வேளச்சேரிப் பகுதியில் சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய்ப் பகுதிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.



சென்னை மாநகராட்சி மூலம் ரூ.51 கோடி செலவில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன. வேளச்சேரி, கொளத்தூர், விருகம்பாக்கம் போன்ற பகுதிகளில் சென்ற காலங்களில் மழைநீர்த் தேக்கம் இருந்து வந்தது. தற்பொழுது மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக வெள்ளப் பாதிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தன்னம்பிக்கையுடன் வீறு நடைபோட சுழல் நிதிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.



சென்னையில் ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 480 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூபாய் 967.40 இலட்சம் சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## கலாச்சாரப் பரிமாற்றத்திற்கான ஒப்பந்தம்



சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும், டெக்சாஸ் மாநகரத்தின் மேயர் திரு. ஹாக்பர்க் அவர்களும் கலாச்சாரப் பரிமாற்றத்திற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியர்கள் கல்வித் திறன் வளர்ச்சியுடன் மன நலமும், உடல் வளமும் பெற்றிட யோகா பயிற்சியினை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பயிற்றுவிக்கிறார்கள்.



மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவிகளின் மன ஒருமைப்பாடு, நல்லொழுக்கம், நினைவாற்றல் மேம்பாடடைய அனைவருக்கும் யோகா பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படுகிறது.

## சென்னை மாநகராட்சியின் 320ஆம் ஆண்டு புகைப்படக் கண்காட்சி



சென்னை மாநகராட்சியின் 320ஆம் ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி 320 அரிய புகைப்படங்கள் கொண்ட புகைப்படக் கண்காட்சியை ரிப்பன் மாளிகையில் திறந்து வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.

சென்னையில் மயானங்கள் நவீன எரியூட்டும் கலன்களாக மாற்றி அமைக்கப்படுவதை மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டார்கள்.



சென்னையில் 27 மயானங்களில் நவீன எரியூட்டும் வசதி ரூ.15 கோடியில் மேற்கொள்ளப்படுகிறது.

மாநகராட்சிப் பள்ளி மாணவிகளின் சுகாதார நலனில் அக்கறை கொண்டு சென்னை மாநகராட்சி சார்பில் இலவசமாக சானிடரி நாப்கின்கள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.




மாநகராட்சிப் பள்ளி மாணவிகளின் உடல் ஆரோக்கியத்தைக் காக்கும் வகையிலும், சுகாதாரம் பேணும் வகையிலும் மாணவிகளுக்கு இலவசமாகச் சென்னை மாநகராட்சி ரூ.17 இலட்சம் செலவில் சானிடரி நாப்கின்கள் வழங்குகின்றது.

தலைவர்களின் வரலாற்றை அறிந்திடும் வகையில், ஜவஹர்லால் நேரு பூங்காவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக் கல்வெட்டினைத் திறந்து வைத்தார்கள்.



சென்னை மாநகரில் தலைவர்களின் பெயகளில் உள்ள பூங்காக்களில் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக் கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

அழகின் தன்மையால் உலகின் முதன்மை நிலையை அடைய இருக்கும் சென்னை மெரினா கடற்கரையின் எழிலூட்டும் பணிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.



சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதிகளை உலகத் தரத்திற்கு இணையாக அழகுபடுத்தும் திட்டம் ரூபாய் 40 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

சென்னை மாநகராட்சியை மக்கள் தேடி வந்த காலம் மாறி, சென்னை மாநகராட்சி மக்களை நாடிச் சென்று குறைகளைக் களைந்திடும் 'மக்களைத்தேடி மாநகராட்சி' நிகழ்ச்சியில் மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் மக்களின் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் தீர்வு காண்கிறார்.



மக்களைத் தேடி மாநகராட்சி நிகழ்ச்சியில் பல்வேறு துறையின் அலுவலர்கள் ஒரே இடத்தில் கூடி, பொது மக்களின் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்கின்றனர். இத்திட்டம் பொது மக்களிடையே பேராதரவைப் பெற்றுள்ளது.

## மாநகராட்சி குறித்து தலைவர்களின் கருத்துக்கள்



முதலிலே தம்பி ஸ்டாலின் மேயராக இருந்தபோதே "சென்னையைச் சிங்காரச் சென்னையாக ஆக்கவேண்டும்" என்று அரும்பாடுபாட்டு இன்றைக்கு நம்முடைய சுப்பிரமணியன் அவர்களுடைய ஆட்சியில் - கார்பரேஷனை நடத்துகின்ற கண்டிப்பான ஆட்சியில் - அவர் ஆற்றுகின்ற கடமை உணர்வு மிக்க இந்த நிர்வாகத்தில் சென்னை மாநகரம் மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

(14-08-2008 அன்று உஸ்மான் சாலை - துரைசாமி சாலை இணைகின்ற மேம்பாலத் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)



சென்னை மாநகராட்சிக்கு 1996 மற்றும் 2001-ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்தலில் நான் வெற்றி பெற்று மேயர் ஆனேன். மக்களுக்காகப் பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. அந்தப் பணியைத் தற்போதைய மேயர் மா.சுப்பிரமணியன் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். சென்னை மாநகராட்சிக்கு இந்த அரசு எப்போதும் துணையாக இருக்கும். சென்னை மாநகராட்சியில் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

**- மு.க. ஸ்டாலின்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

(சென்னை மாநகராட்சி 320ஆம் ஆண்டு விழாவில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)



பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக இந்தியாவிலேயே அதிகத் திட்டங்கள் ஒரு மாநகராட்சியில் நடைபெறுமானால் அது சென்னை மாநகராட்சியில்தான். மிகச் சிறந்த முறையில் சென்னையில் திட்டங்கள் நடைபெற்று வருகிறது.

**- ஜி.கே. வாசன்**

மாண்புமிகு புள்ளியியல்துறை மத்திய இணை மந்திரி

(தமிழ்நாடு மணல் அள்ளும் இயந்திர உரிமையாளர்கள் நலச்சங்க அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி)



சென்னை - மாநகராட்சியின் வரவு - செலவு அறிக்கையில் தொட்ட இடம் எல்லாம் புதுமையும், வளர்ச்சியும் ஊற்றெடுத்துப் பீறிட்டு எழுகிறது.

வரியே இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கை நேற்றைய தினம் அளிக்கப்பட்டுள்ளது. அரிய சாதனை இது.

பிளஸ் டு தேர்வில் முதலிடம் பெறுவோருக்குக் "கணினி" அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்க ஒன்றாகும். பெரும்பாலும் ஏழை - எளிய மக்கள் படிக்கும் கல்வி நிறுவனங்கள்தாம் மாநகராட்சிப் பள்ளிகள்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகர மேயராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மேம்பாலங்களைத் தொடர்ந்து, மேலும் மூன்று மேம்பாலங்களைக் கட்ட ரூ.110 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்புமிக்க திராவிட இயக்க வரலாற்றின் வழித்தோன்றல் என்ற பெருமையோடு மேலும் சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறோம்.

**- கி.வீரமணி**

தலைவர், திராவிடர் கழகம்

(சென்னை மாநகராட்சி 2008-09 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்த கருத்து)

## சென்னை மாநகராட்சி 320ஆம் ஆண்டு விழாவில் பல்துறை வல்லுநர்கள் சென்னை மாநகராட்சி குறித்து தெரிவித்த கருத்துக்களின் சில துளிகள் ...



சென்னை மாநகராட்சியில் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலுவையில் உள்ள சொத்துவரிகள் வசூலிக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிகின்றன. சென்னை மாநகராட்சிக்குத் தகுதியான, சிறந்த மேயராக திரு.மா.சுப்பிரமணியன் விளங்குகிறார்.

**– இந்து என். ராம்**



மாபெரும் வளர்ச்சியைச் சென்னை மாநகரம் பெற்றுள்ளது. சென்னையின் வளர்ச்சி மிகப் பிரமாதம். திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகர மேயராக இருந்த பொழுது சோடியம் விளக்குகள் மாற்றியமைக்கப்பட்ட பணி மிகவும் பாராட்டத்தக்கதாகும். தற்பொழுது சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் வளர்ச்சி சிறப்பானதாக உள்ளது.

**– நடிகர் சத்யராஜ்**

## சென்னை மாநகராட்சி 320ஆம் ஆண்டு விழாவில் பல்துறை வல்லுநர்கள் சென்னை மாநகராட்சி குறித்து தெரிவித்த கருத்துக்களின் சில துளிகள் ...



சென்னையில் பனகல் பூங்காவைச் சுற்றி விளம்பரப் பலகைகள் இருந்தன. சென்னை மாநகராட்சி அந்த விளம்பரப் பலகைகளை அகற்றிய பின்பு, இப்பொழுது பனகல் பூங்காவைப் பசுமையாகவும், அழகாகவும், முழுமையாகவும் காண முடிகிறது.

– நல்லி குப்புசாமி செட்டி



சென்னை மாநகராட்சிப் பல்வேறு திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. சின்ன சின்ன இடங்களில் கூட பூங்காக்கள் அமைக்கப்பட்டு அழகாகக் காட்சி அளிக்கின்றது. மயானங்களில் புல்தரைகள் அமைக்கப்பட்டு வருவது மிகவும் சிறந்த பணியாகும். மாநகராட்சியின் கவனம் மயானங்களின் பக்கமும் திரும்பி இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

– எழுத்தாளர் சிவசங்கரி



சென்னையில் நாள்தோறும் போடப்படுகின்ற குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்தும் பணியினை மேற்கொண்டு வரும் சென்னை மாநகராட்சியின் பணி பாராட்டுக்குரியதாகும்.

– நடிகை ரேவதி

# சென்னை மாநகராட்சி பெற்ற விருதுகள்



### லிம்கா சாதனைக்கான சான்றிதழ்

155 வட்டங்களில் மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்ததன் மூலம் 'லிம்கா சாதனை' புத்தகத்தில் இடம் பிடித்தது.






### உலகத் தலைமைப் பண்பிற்கான விருது

பள்ளி எய்ட்ஸ் கல்வித் திட்டத்துக்காக 'உலக தலைமைப் பண்பிற்கான' விருது பெற்றுள்ளது.

### முதன்மை மாநகராட்சிக்கான விருது

2006-07 ஆண்டில் இந்தியாவில் உள்ள மாநகராட்சிகளில் சீர்த்திருத்தத்தை நிறைவேற்றும் பொறுப்புடன் மாநகராட்சிகள் மேற்கொள்ளும் முன் முயற்சிகளில் சிறப்பிடம் பெற்று சென்னை மாநகராட்சிக்குக் **'கிரிசில்'** விருது வழங்கப் பட்டுள்ளது.

# அழைக்கிறது...... சென்னை மாநகராட்சி !

கடலின் வலிமை அதன் அலைகளைப்
பொருத்து அமையும்
கட்டடத்தின் வலிமை அதன் அஸ்திவாரத்தைப்
பொருத்து அமையும்
காற்றின் வலிமை அதன் வேகத்தைப்
பொருத்து அமையும்
கதிரவனின் வலிமை அதன் கதிர்களைப்
பொருத்து அமையும்
"அவைபோல்'
சென்னை மாநகராட்சியின் வலிமை
அதன் பல்துறைப் பணிகளின்
செயற்பாடுகளால் - செயற்பாடுகளின்
வளர்ச்சியால் - அவ்வளர்ச்சியினால்
மக்கள் அடையும் பயன்களால் அமையும்.
சென்னை மாநகர மக்கள்
இந்த இரண்டாண்டுகளாய்
அன்றாடம் அடைந்து வரும் பயன்களை
வண்ணப்படங்களின் சாட்சியங்களுடன்
வகைப்படுத்திக் காட்டி
அனைவரும் அறிந்திட அறிந்து மகிழ்ந்திட
அழைக்கிறது சென்னை மாநகராட்சி !

# கல்வித்துறை

அறியாமை இருள்நீங்கி வாழ்க்கை ஒளிபெற அனைவருக்கும் கல்விக்கண் இன்றியமையாதது என்பதனை உணர்ந்து சென்னை மாநகராட்சி கல்விப்பணியில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

## உபகரணங்கள்

பள்ளி மாணவ/மாணவியர்க்கான சாய்வு இருக்கைகள் ரூ.5.72 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 380 கணினிகளும், இந்த ஆண்டு 884 கணினிகளும், 78 பிரிண்டர்கள், இதர உபகரணங்கள் எல்காட் நிறுவனம் மூலம் ரூ.3.78 கோடி செலவில் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன. அறிவியல் பாட வகுப்புகளைச் சிறப்புடன் நடத்திட ரூ.35 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வுக்கூடச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



### தேர்ச்சி விகிதம்

2006–ஆம் ஆண்டு பொதுத்தேர்வில் 12–ஆம் வகுப்பு 71 சதவிகிதமும், 10–ஆம் வகுப்பு 76 சதவிகிதமும், 2007ம் ஆண்டு பொதுத்தேர்வில் 12–ஆம் வகுப்பு 81.8 சதவிகிதமும், 10–ஆம் வகுப்பு 79.5 சதவிகிதமும், 2008–ஆம் ஆண்டு பொதுத்தேர்வில் 12–ஆம் வகுப்பு 81 சதவிகிதமும், 10–ஆம் வகுப்பு 79 சதவிகிதமாகவும் தேர்ச்சி விகிதங்கள் அமைந்துள்ளன.



### சிறந்த ஆசிரியர்–மாணவர்க்கான ஊக்கப் பரிசுகள்

அரசு பொதுத்தேர்வில் சென்னை மாநகராட்சிக்குள் முதல் மூன்று இடங்கள் பெறும் தலைமை ஆசிரியர்களுக்குத் தலா முதல் பரிசாக ரூ.5 ஆயிரம், 2–ஆம் பரிசாக ரூ.3 ஆயிரம், 3–ஆம் பரிசாக ரூ.2 ஆயிரம் என ரொக்கப்பரிசு, கேடயம் வழங்கி சிறப்பிக்கப்படுகின்றன.



பொதுத்தேர்வில் 90 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி அளித்த தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூ.1,000/– ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 95 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கு ரூ.500/– ரொக்கப்பரிசாக வழங்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 27 மேல்நிலைப்பள்ளிகளில் 12–ஆம் வகுப்புப் பிரிவில் முதலிடம் பெற்ற 28 மாணவ/ மாணவிகளுக்கு லேப்டாப்கள் ரூ.8,07,212/– செலவில் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

10–ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று 11–ஆம் வகுப்பில் பயின்று வரும் 25 மாணவர்களுக்குத் தரவரிசை அடிப்படையில் கல்விச்சுற்றுலா ரூ.3,17,000/– செலவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

12–ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் 25 இடம் பெற்ற மாணவர்களின் மேற்படிப்பிற்கு வருடந்தோறும் ஊக்கத்தொகை வழங்க சென்ற ஆண்டு ரூ.8,50,000/–மும், நடப்பு ஆண்டில் ரூ.9 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

## சிறப்புப் பயிற்சிகள்

மாணவர்களுக்குச் சிறந்த கல்வி கொடுக்க முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 3 நாட்கள், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2 நாட்கள் எனத் திறன் ஊக்கப்புத்தாக்கப் பயிற்சிகள் ரூ.1.23 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. ஆசிரியர் மூலம் மாணவ/ மாணவியருக்கு யோகாசனப் பயிற்சி வழங்கப்பட்டது. வீட்டா நிறுவனம் மூலம் மாணவர்க்கு ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வழங்கப்படுகிறது.



## ஆரோக்கிய வாழ்வு

மாணவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு இன்றி படிக்க மாலைநேர சிறப்பு வகுப்புகளில் பழரொட்டிகள் ரூ.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவிகளின் சுகாதாரம் பேணும் வகையில் சானிடரி நாப்கின்கள் ரூ.17,75,500/– செலவில் இலவசமாக

வழங்கப்படுகின்றன. பல்குறை நீக்க, கண்குறை நீக்கப் பள்ளிகளில் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

பள்ளிகளின் வசதி, பாதுகாப்புக் கருதி ரூ.8.17 இலட்சம் செலவில் ஒலிபெருக்கிக் கருவிகள், மின்சார மணிகள், தீயணைப்புக் கருவிகள் ஆகியன வழங்கப்பட்டன.



விளையாட்டுச்சாதனங்கள் ரூ.10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாநகராட்சித் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.95 இலட்சம் செலவில் இயந்திரங்கள், தளவாடப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.



10, 12–ஆம் வகுப்பு மாணவிகள் பயன்பெறும் வண்ணம் தகுதிக்கு ஏற்ற வகையில் உயர்கல்வி பெறுதல், வேலை வாய்ப்புப் பெறுதல் போன்ற பல வழிகாட்டுக் (Career Guidance) கலந்தாய்வுக் கூட்டங்கள் வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டு மையம் மூலமாக நடத்தப்படுகிறது.

சுதந்திரதினம், குடியரசுதினம், பெருந்தலைவர்களின் பிறந்தநாள் விழாக்கள் ஆகியன கொண்டாட ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.5 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.15,55,000/– வழங்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியின் மழலையர் பள்ளிகளில் மாண்டிசோரி கல்வி முறையானது ரூ.30 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சியும், பள்ளிக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.





## சமுதாயக் கல்லூரிகள்

சென்னை மாநகராட்சிக் கல்வித்துறையின் கீழ் நான்கு சமுதாயக் கல்லூரிகள் 1999–ஆம் ஆண்டு முதல் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள் வேலை வாய்ப்பினை, செயல்திறனை, தொழில் பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு தரமான கல்வியை வழங்கி வருகின்றன. சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களில்



உள்ள குழந்தைகளுக்கு இக்கல்லூரிகள் முன்னுரிமை வழங்குகின்றன. 2007ம் ஆண்டு வரை பயின்ற 2030 மாணவர்களில் 90 சதவீதம் பேர் தகுந்த வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.



உடனடியாக வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் சென்ற கல்வி ஆண்டில் சமுதாயக் கல்லூரி (தெற்கு), திருவல்லிக்கேணியில் ஆரம்பிக்கப்பட்ட 1. Business Process Outsourcing (B.P.O.) 2. Customer Relations and Sales 3. Hospitality Services குறுகிய காலப் பயிற்சியில் 367 மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட்டு 95 சதவீதம் பேர் நகரில் முன்னோடியாக உள்ள நல்ல தொழில் நிறுவனங்களில் கணிசமான ஊதியத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

இக்குறுகிய காலப் பயிற்சி மக்களின் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள காரணத்தால், வடசென்னை பகுதியில் உள்ள ஏழை மாணவ மாணவியர்களும் பயன்பெறும் வகையில், வடசென்னை நாட்டுப்பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள சமுதாயக் கல்லூரியில் ஜூன் 2008 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள 1) B.P.O. 2) Information Technology Enabled Services ( ITES) 3) Electrical Technician 4) Cutting and Tailoring ஆகிய 4 புதிய பாடப்பிரிவுகளில் 3 மாத குறுகிய காலப் பயிற்சிகளில் மாணவ மாணவியர்கள் சேர்க்கை செய்யப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.





# சுகாதாரத்துறை

இந்தியாவிலேயே முதன்முறையாகச் சென்னை மாநகராட்சியின் மயான பூமிகளில் பிரேதங்களைப் புதைப்பதும், எரியூட்டுவதும் இலவசமாக்கப் பட்டுள்ளது.



சென்னையில் உள்ள 38 மயானங்களில் 27 மயானங்கள் நவீன எரியூட்டும் வசதிகள் ரூ.15 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மீதமுள்ள 11 மயானங்கள் ரூ.28 கோடியில் புதுப்பித்தல் மற்றும் நவீன எரியூட்டும் வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.




சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மயானங்களிலும், தகனம் அல்லது அடக்கம் செய்வது எவ்விதக் கட்டணமுமின்றி இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது.

சொந்த, செல்லப் பிராணிகள் இறந்தால் அடக்கம் செய்ய வடசென்னையில் வண்ணாரப்பேட்டை மயான பூமியிலும், தென்சென்னையில் மயிலாப்பூர் மயானபூமியிலும் தனியாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



600க்கும் மேற்பட்ட கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு 88536 கண்புரை நோயாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனை மூலம் இலவசமாகக் கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளன.

## கொசு தடுப்புப்பணி

'தொல்லை தரும் கொசுக்கள் இனி இல்லை' என்றாக்க, ரூ.14.16 இலட்சத்தில் பெரிய புகை பரப்பும் இயந்திரங்கள் 2 வாங்கப்பட்டது. அவற்றைப் பொருத்துவதற்காக இரண்டு இலகு ரக நான்கு சக்கர வாகனங்களும், மண்டலம்–5ல் பழுதடைந்த வாகனத்தை மாற்றுவதற்காக ஒரு இலகு ரக நான்கு சக்கர வாகனமும் ரூ.30.31 இலட்சத்தில் வாங்கப்பட்டது. சிறிய நீர்வழிப் பாதைகளில் தீவிர கொசுப்புழு ஒழிப்புப் பணிக்காக 6 பைபர் படகுகளும், 20 காலினால் இயங்கும் தெளிப்பான்களும் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன. ரூ.93,000/– செலவில் 6 கட்டு மரங்கள் வாங்கி, அவை மூலம் கூவம், அடையாறில் உள்ள ஆகாயத்தாமரை செடிகளை அகற்றி கொசுப்புழுக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.




2008–2009ம் ஆண்டில் 25 இயந்திரத்தில் இயங்கும் தெளிப்பான்கள் வாங்கி ஈ ஒழிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## நாய்கள்– கட்டுப்படுத்துதல்

கடந்த இரண்டாண்டுகளில் 34,223 நாய்கள் மாநகராட்சி மூலம் பிடிக்கப்பட்டு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையளித்து வெறிநாய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.



## திரியும் மாடுகள்—கட்டுப்படுத்துதல்

கடந்த இரண்டாண்டுகளில் **2496** மாடுகள் பிடிக்கப்பட்டு அபராதத் தொகையாக ரூ.37,70,450/– வசூலிக்கப்பட்டுள்ளது.

## நவீன இறைச்சிக்கூடம்

வில்லிவாக்கம் இறைச்சிக்கூடம் ரூ.35 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை இறைச்சிக்கூடம் ரூ.40 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டு 6.9.2008ல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.

## வருமுன் காப்போம் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வரின் வருமுன் காப்போம் திட்டத்தின்படி இதுவரை 44 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.



ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர். இதில் இருதய நோயாளிகள் 1042, சர்க்கரை நோய் உள்ளவர்கள் 3017, இரத்த அழுத்தம் உள்ளவர்கள் 4144, கண், காது, மூக்கு, தொண்டை 5602, கண்புரை உள்ளவர்கள் 1130, தோல் வியாதி உள்ளவர்கள் 5810, கருப்பை வாய்ப்புற்று நோய் உள்ளவர்கள் 339 நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தொடர் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

## உணவுக் கலப்படம் மற்றும் குடிநீர்ப்பரிசோதனை

சென்னை மாநகரில் சுகாதாரத் துறையினர் நடத்திய ஆய்வுகளில் தரமற்ற மற்றும் உணவுக் கலப்படத் தடைச் சட்ட விதிகளுக்கு மாறாக விற்பனைக்கு வைத்திருந்த ரூ.3.50 இலட்சம் குடிநீர் பாக்கெட்டுகள் மற்றும் 5500 குடிநீர் கேன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.



உணவுக் கலப்படத் தடைச்சட்டத்தின்படி 32 உணவு வகை கலப்படமானவை எனக் கண்டறியப்பட்டு விற்பனையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கோயம்பேடு பழ அங்காடியில் பொதுமக்களுக்குக் கேடு விளைவிக்கும் கால்சியம் கார்பைடு கற்களை விற்பனைச் செய்த கடை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சீல் வைத்து மூடப்பட்டு விற்பனை தடுத்து நிறுத்தப்பட்டது.

## மாவட்டக் குடும்ப நலத்துறை

சென்னை மாநகராட்சியில் 93 நகர நலவாழ்வு நிலையங்கள் உள்ளன. அவற்றில் மகப்பேறு மருத்துவமனைகள் 16ம், பேறுகாலப் பின் கவனிப்புத் திட்ட மையங்கள் 12ம் உள்ளன.



கடந்த இரண்டாண்டுகளில் ரூ. 23 இலட்சம் செலவில் அல்ட்ராசோனிக் ஸ்கேன் கருவிகள், லேப்ராஸ்கோப் கருவிகள், குழந்தைநல வார்டுகளுக்குத் தேவையான கதகதப்பு ஊட்டும் கருவிகள், போட்டோதெரபி யூனிட், கணினிகள் முதலியவை வாங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே முதல்முறையாகச் சென்னை மாநகராட்சி மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பரிசுப்பை வழங்கப்படுகிறது.

சென்னையில் 10 மண்டலங்களிலும் குளுகுளு அறையில் பிரசவங்கள் பார்க்கப்படுகின்றன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 59,219 பயனாளிகளுக்கு ரூபாய் 20 கோடியே 80 இலட்சத்து 28 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 5200 பயனாளிகளுக்கு ரூபாய் 8 கோடியே 32 இலட்சத்து 40 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



# கட்டடம்

## பள்ளிக் கட்டடப் பணிகள்

சிங்காரச் சென்னையில் அறியாமை இருளகற்றி அனைத்துச் சிறார்களுக்கும் கல்விக் கண்ணைத் திறக்கும் நோக்குடன் மாநகராட்சிப் பள்ளிகளுக்காக 311 வகுப்பறைகளும், 12 ஆய்வுக்கூடங்களும் கொண்ட 75 பள்ளிக் கட்டடப் பணிகள் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 94 வகுப்பறைகளும் 3 ஆய்வுக்கூடங்களும் கொண்ட 20 பள்ளிக் கட்டடப் பணிகள் ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.



## இதர கட்டடப் பணிகள்

தொற்றுநோய் மருத்துவமனைக்கான 2 கட்டடப் பணிகள் ரூ.82 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு குடும்பநல மைய அபிவிருத்திப்பணி ரூ.12 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு சலவைத் துறைப்பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு சமூகநலக்கூட அபிவிருத்திப்பணி ரூ.27 இலட்சம் மதிப்பீட்டிலும், 4 விளையாட்டுத்திடல் அபிவிருத்திப் பணிகள் ரூ.1.02 கோடி மதிப்பீட்டிலும், சர்.பி.ட்டி தியாகராயர் கலையரங்கத்தில் ஒரு கூடுதல் கட்டடப் பணி ரூ.14 இலட்சம் மதிப்பீட்டிலும், மகளிர் தங்கும் விடுதிக்கான ஓர் அபிவிருத்திப்பணி ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், நவீன குப்பை மாற்று நிலையத்திற்கான 2 அபிவிருத்திப் பணிகள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு



எரிவாயு எரியூட்டகப் பணி ரூ.32 இலட்சம் மதிப்பீட்டிலும், சாலையோர வியாபாரிகளுக்கான கடைகள் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், அடையாறு பூங்காவில் சுற்றுச்சுவர் கட்டும் பணி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.4.65 கோடி ஆகும்.

## நடைபெற்று வரும் பணிகள்

தொற்றுநோய் மருத்துவமனைக்கான ஒரு பணி ரூ.34 இலட்சம் மதிப்பீட்டிலும், 12 மருந்தகம் மற்றும் குடும்ப நல மையக் கட்டடப் பணிகள் ரூ.3.80 கோடி மதிப்பீட்டிலும், 12 மயானங்களில் எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணிகள் ரூ.3.34 கோடி மதிப்பீட்டிலும்,



நான்கு வார்டு அலுவலகக் கட்டடப் பணிகள் ரூ.1.60 கோடி மதிப்பீட்டிலும், மைலேடிஸ் பூங்கா ராயல் நீச்சல்குளத்தின் 3 அபிவிருத்திப் பணிகள் ரூ.1.04 கோடி மதிப்பீட்டிலும் , சாலையோர வியாபாரிகளுக்கான கடைகள் கட்டும் இரண்டு பணிகள் ரூ.1.76 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சலவைத்துறைக்கான ஓர் அபிவிருத்திப் பணி ரூ.13 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.12.01 கோடி ஆகும்.

# பூங்காக்கள்

சிங்காரச் சென்னையை உருவாக்கும் கனவை நனவாக்க சென்னை மாநகரைப் பசுஞ்சோலையாக்கும் பணிகள் ரூ.12.50 கோடி செலவில் மைலேடிஸ் பூங்கா, பழைய ஆந்திரா பேருந்து நிலையம் பூங்கா, சத்தியமூர்த்தி நகர் பூங்கா, சத்தியவாணிமுத்து நகர் பூங்கா, எருக்கஞ்சேரி–இந்திராநகர் பூங்கா, செனாய்நகர் பூங்கா, ஜி பிளாக் பூங்கா, ஈவெ.ரா. சந்து சாலை பூங்கா, ஸ்பென்சர் பிளாசா திறந்தவெளிப் பூங்கா, மேயர் சுந்தரராவ் பூங்கா, ஹாடஸ் சாலை பூங்கா, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை பூங்கா, டர்ன்புல்ஸ் சாலை பூங்கா, நமச்சிவாயபுரம் பூங்கா, தெற்கு ஆசிய விளையாட்டு மைதானக் குடியிருப்புப்பகுதி பூங்கா ஆகியன மேம்படுத்தப்பட்ட முக்கிய பூங்காக்களாகும்.



ரூ.8.21 கோடி செலவில் நெசப்பாக்கம் ஏரிக்கரை பூங்கா, அசோக்நகர் முதல் அவென்யூ பூங்கா, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை பூங்கா ஆகியன புதுப்பிக்கப்பட்டன. 400 சாலை ஓரப்பூங்காக்கள், 170 சாலை தீவுத்திடல்களில் குத்துச் செடிகள், பார்டர் செடிகள் நடப்பட்டு புதுப்பிக்கப்பட்டன.



ரூ.14 கோடி செலவில் 83 பூங்காக்கள், 128 பணிகள் நடைபெற்று வருகின்றன. நடேசன் பூங்கா, பனகல் பூங்காக்களைப் புதுப்பித்தல், மயானபூமிகளில் புல்தரை அமைத்து எழிலூட்டுதல், நேப்பியர் பாலம் அருகில் மிதக்கும் கூவம் நதியில் நீர்வீழ்ச்சி அமைத்தல், மெரினா நீச்சல்குளம் அருகில் மிதக்கும் நீர்வீழ்ச்சி அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன. நேப்பியர் பாலம் அருகில் மேலும் ஒரு இராட்சத நீர்வீழ்ச்சி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



தேவராஜ்நகர் நாவலர் பூங்கா, வேளச்சேரி சாலை பூங்கா, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப்பூங்கா, காமராஜ்நகர் 2வது மேற்குத்தெரு பூங்கா, திருவள்ளுவர் நகர் 43வது குறுக்குத்தெரு பூங்கா, திருவள்ளுவர் 2வது நிழற்சாலைப்பூங்கா, கண்ணப்பர் நகர் பூங்கா, சி.ஜி.இ. காலனி பூங்கா, பெசன்ட் நகர் 4வது அவென்யூ பூங்கா, டாக்டர் முத்துலட்சுமி சாலை பூங்கா, எம்.ஆர்.சி.நகரில் பூங்கா, திறந்தவெளி பூங்கா, எம்.கே.பி.நகர் 16வது கிழக்குத் தெரு பூங்கா, கே.கே.ஆர்.அவென்யூ பூங்கா, நியூ ஆவடி சாலை சாலையோரப் பூங்காக்கள், தெற்காசிய விளையாட்டுத்திடல் பூங்காக்கள், சித்ரா அவன்யூ திறந்தவெளிப்பூங்கா ஆகியன மக்களின் பயன்பாட்டிற்காக அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



மேலும் எம்.ஆர்.சி. நகர் பூங்கா, அடையாறு ஆவின் பூங்கா, திருவான்மியூர், காமராஜ்நகரில் இரண்டாவது மேற்குத் தெரு பூங்கா, திருவள்ளுவர் நகரில் இரண்டாவது அவென்யூ பூங்கா, மத்திய அரசு ஊழியர் குடியிருப்புப் பூங்கா, நியூ ஆவடி






ரோடில் சாலையோரப் பூங்கா, நுங்கம்பாக்கம் ரயிலடி அருகில் சித்ரா அவென்யூ பூங்கா, பல்லவன் சாலையில் கே.கே.ஆர்.அவென்யூ பூங்கா, திருவள்ளுவர் நகரில் 7வது மெயின் ரோடு பூங்கா, கானகம் பூங்கா, வேளச்சேரி மெயின் ரோடு பூங்கா, பெசன்ட் நகரில் 4வது குறுக்குத் தெரு பூங்கா ஆகிய பூங்காக்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளை உலகத் தரத்திற்கு இணையாக அழகுபடுத்தும் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வண்ணமிகு செடிகள், புல்வெளிகள், அழகிய நடைபாதைகள், நீரூற்றுகள் போன்றவை அமைக்கும் பணிகள் ரூ.7 கோடி செலவில் ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதையிலிருந்து போர் நினைவுச்சின்னம் வரை 935 மீட்டர் நீளத்திற்கும், ரூ.17 கோடி செலவில் மெரினா கடற்கரைப் பகுதியில்



நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை 3 கி.மீ. நீளத்திற்கும், ரூ.3 கோடி செலவில் எலியட்ஸ் கடற்கரைப் பகுதியில் 8355 மீட்டர் நீளத்திற்கும், ரூ.4 கோடி செலவில் திருவான்மியூர் கடற்கரைப் பகுதியில் அஷ்டலட்சுமி கோயில் முதல் மாநகராட்சி எல்லை வரையிலான 2500 மீட்டர் நீளத்திற்கும் நடைபெற்று வருகின்றன.



பேருந்து போக்குவரத்துச் சாலைகளில் கிரானைட் தடுப்புச்சுவர்களால் ஆன சாலை மையத்தடுப்புகள், அதனருகில் எழில்மிகு செடி வகைகள் நடவு செய்யப்பட்டு சிங்காரச் சென்னைக்கு எழிலூட்டப்பட்டு வருகின்றன.

## பாலங்கள்

சிங்காரச் சென்னையை உருவாக்க நீர்வழிகள் மற்றும் சிறப்புப் பாதைகளைக் கடப்பதற்கு ஏற்கனவேயுள்ள மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகளைப் பராமரித்தல், அகலப்படுத்துதல் பணிகளையும் புதியபாலங்களை அமைக்கும் பணிகளையும் சென்னை மாநகராட்சியின் பாலங்கள் துறை தொடர்ந்து செய்து வருகிறது.

1996 முதல் 2001 வரை 76 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.8265.03 இலட்சங்கள் மதிப்பீட்டில் 18 பெருந்திட்டங்களும், ரூ.205.61 இலட்சங்கள் மதிப்பீட்டில் 58 சிறுபாலப் பணிகளும் முடிக்கப்பட்டன.

2001 முதல் 2006 வரை 3 பாலப் பணிகள் ரூ.493.39 இலட்சங்கள் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டன.

2006ம் ஆண்டிற்குப் பிறகு முதற்கட்டமாக ரூ.9.72 கோடி மதிப்பீட்டில் வடக்கு உஸ்மான் சாலை, மகாலிங்கபுரம் சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலம் மாண்புமிகு தமிழக முதல்வரால் 30.03.2008 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.



மேலும் ரூ.19.80 கோடி மதிப்பீட்டில் உஸ்மான் சாலை, துரைசாமி சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலம் மாண்புமிகு தமிழக முதல்வரால் 14.08.2008 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. கோபதி நாராயண சாலை–திருமலை சாலை சந்திப்பில் ரூ.16.50 கோடி மதிப்பீட்டிலும் மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பாலப் பணி டிசம்பர் 2008ல் முடிவடையும்.




பெரம்பூர் மேம்பாலப் பணி

வடசென்னை மக்களின் நீண்டநாள் கனவான பெரம்பூர் மேம்பாலப்பணி புதிய வடிவில் ரூ.51 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்தூர் சாலையில் தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி ரூ.6.03 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

மணியக்காரச் சத்திரத் தெருவில் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.10.55 கோடி மதிப்பீட்டிலும் இரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம் அமைக்கும் பணி ரூ.15.75 கோடி மதிப்பீட்டிலும் ஜோன்ஸ் சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.4.33 கோடி மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன.


ஜோன்ஸ் சாலை சுரங்கப்பாதை பணி

டர்ன்புல்ஸ் சாலை, செனடாப் சாலை சந்திப்பில் ரூ.19.93 கோடி மதிப்பீட்டிலும் வில்லிவாக்கம் (எல்.சி.2) இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.13.40 கோடி மதிப்பீட்டிலும், கத்திவாக்கம் நெடுஞ்சாலை, காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன மேம்பாலம் ரூ.12.20 கோடி மதிப்பீட்டிலும் கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம் ரூ.6.28 கோடி

மதிப்பீட்டிலும் தங்கச்சாலையில் வாகன மேம்பாலம் ரூ.26.00 கோடி மதிப்பீட்டிலும் வியாசர்பாடி கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் வாகன மேம்பாலம் ரூ.61.70 கோடி மதிப்பீட்டிலும் திருவான்மியூர் லேட்டீஸ் பாலம் சாலையில் வாகன மேம்பாலம், சுரங்கப்பாதைப் பணிகள் ரூ.126.40 கோடி மதிப்பீட்டிலும் கேப்டன் கால்வாய், பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் சிறு கால்வாய்களின் குறுக்கே 12 பாலப்பணிகள் ரூ.8.30 இலட்சங்கள் மதிப்பீட்டிலும், போஜராஜநகர் சந்திக்கடவின் வாகனச்சுரங்கப்பாதை ரூ.4.00 கோடி மதிப்பீட்டிலும் பெரம்பூர் லோகோ ஓர்க்ஸ் மேம்பாலம் அகலப்படுத்தல் ரூ.7.00 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எழில்மிகு சிங்காரச் சென்னையை உருவாக்க நகரின் முக்கியப் பகுதிகளில் அமைந்துள்ள சுரங்கப்பாதைகள், மேம்பாலங்கள் ஆகியவற்றில் கலைநயமிக்க வர்ணம் பூசப்பட்ட ஓடுகள் பதித்தல், மின் ஒளிவிளக்குகள், வண்ணப் பூக்களுடன் கூடிய புல்தரைகள் அமைக்கப்படவுள்ளன.

## சாலைகள்

சென்னை மாநகரை மேம்பட்ட போக்குவரத்து வசதிகள் நிறைந்த மாநகராக மாற்ற சாலைப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ரூ.164.78 கோடி செலவில் 1086.14 கி.மீ. நீளம் கொண்ட தார்ச்சாலைகளும், ரூ.72 கோடி செலவில்



260.72 கி.மீ. நீளம் கொண்ட கான்கிரீட் சாலைகளும், ரூ.17.88 கோடி செலவில் 220.11 கி.மீ. நீளம் கொண்ட நடைபாதைப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.



3988 உட்புறத் தார்ச்சாலைகள் ரூ.164.78 கோடி மதிப்பீட்டிலும் 25.24 கி.மீ. நீளமுள்ள 70 தார்ச்சாலைகள் ரூ.5.65 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

117.95 கி.மீ. நீளமுள்ள 424 கான்கிரீட் சாலைகள் ரூ.28.87 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டும், 5.42 கி.மீ. நீளமுள்ள 22 கான்கிரீட் சாலைப்பணிகள் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றும் வருகின்றன. 142.77 கி.மீ. நீளமுள்ள 762 கான்கிரீட் சாலைகள் ரூ.43.13 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, ரூ.6.10 கோடி மதிப்புள்ள 19.76 கி.மீ. நீளமுள்ள 108 கான்கிரீட் சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



220.11 கி.மீ. நீளமுள்ள 420 நடைபாதைப் பணிகள் ரூ.17.88 கோடியில் புதுப்பிக்கப்பட்டு, ரூ.7.58 கோடி மதிப்பீட்டில் 82.31 கி.மீ. நீளமுள்ள 108 நடைபாதைப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

## பேருந்து சாலைகள்

அழகுமிகு சென்னைக்கு அணிகலனாய்ச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டு நிதியாண்டுகளில் ரூபாய் 31.91 கோடி மதிப்பீட்டில் 58 கி.மீ. நீளமுள்ள 121 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, 2.50 கி.மீ. நீளமுள்ள 7 பேருந்து சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்பட்டு, 19 பேருந்து சாலை சந்திப்புகளில் மாஸ்டிக் ஆஸ்பால்ட் உபயோகித்து சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.



நடப்பு நிதியாண்டில் ரூ.19.84 கோடி மதிப்பீட்டில் 25.50 கி.மீ. நீளத்திற்கு 50 பேருந்து சாலைகள் தார்ச்சாலைகளாகவும், 2 சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 13.0 கி.மீ. நீளத்திற்கு கிரானைட் கற்கள் உபயோகித்து மையத்தடுப்பு அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. ரூ.16.27 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலைப்பணிகள் நடைபெற உள்ளன.

மேலும், சென்னையில் உள்ள 236 குடிசைப்பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கத்தின் கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்தின் மூலம் (JNNURM-BSUP) ரூ.127.44 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



சென்னை மாநகரில் பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாலைகளில் வாகன நிறுத்தம் (CAR PARKING) வசதி அதிகமாகத் தேவைப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு சென்னை மாநகரில் கீழ்க்கண்ட 3 இடங்களில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் பின் ஒப்படைத்தல் (DBOT) முறையில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் ஏற்படுத்தப்பட உள்ளது.

1. வாலஸ் தோட்டம் முதல் தெரு (கிரீம்ஸ் சாலை அருகில்)
2. பிராட்வே பேருந்து நிலையம்
3. ரிட்சி தெரு (சிந்தாதிரிப்பேட்டை)

## ஓய்வூதியப் பலன்கள்



சென்னை மாநகராட்சியில் பல ஆண்டுகளாக ஓய்வூதிய பலன்கள் கிடைக்கப் பெறாதவர்களுக்கு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களால் 1206 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.27 கோடியே 63 இலட்சத்து 24 ஆயிரத்து 498 நிலுவைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## இயந்திரப் பொறியியல் துறை

சென்னை மாநகராட்சியில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இயந்திரப் பொறியியல் துறை மாநகராட்சிப் பணிகளுக்காகப் பல்வேறு ஊர்திகளைக் கொள்முதல் செய்து பயன்படுத்தி வருகிறது. பள்ளிகள் பயன்பாட்டிற்கு ஒரு சுற்றுலாப் பேருந்து, துப்புரவுப் பணிக்காக இரண்டு ரோல் ஆன் ரோல் ஆப் டிப்பர் வாகனங்கள், ஆய்வுப் பணிகளுக்காக ஒரு மகேந்திரா ஸ்கார்பியோ வாகனம், 5 டீசல் அம்பாசிடர் கார்கள், 3 பெட்ரோல் அம்பாசிடர் கார்கள், 3 மகேந்திர பொலிரோ ஜீப்கள், துறைத்தலைவர்களுக்கு 8 பொலிரோ ஜீப்கள் ஆகியவற்றை ரூ.1.66 கோடி மதிப்பீட்டில் வாங்கி உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.





துப்புரவுப் பணியினை நவீனப்படுத்த 65 குப்பை நெருக்கும் காம்பாக்டர்கள் ரூ.12.55 கோடி மதிப்பீட்டிலும், கட்டட இடிபாடுகள் அகற்றுவதற்காக 10 டிப்பர் லாரிகள் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலும், தெருவிளக்குகள் பழுது நீக்கல் பணிகளுக்காக 4 ஹைட்ராலிக் லேடர் வாகனங்கள் ரூ.43.77 இலட்சங்கள் மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



## மழைநீர் வடிகால்வாய்

சென்னை மாநகரில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்காக மழைநீர் வடிகால்வாய்ப் பணிகள் துரிதமாக நடைபெற்றுள்ளன. வேளச்சேரி, கொளத்தூர், விருகம்பாக்கம் ஆகிய தாழ்வான பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டன. சென்னை மாநகரில் மொத்தம் 104 கி.மீ. நீளத்திற்கு ரூ.51.00 கோடி தொகையில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.30 கோடி மதிப்பீட்டில் 33 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.



## மின்துறை

எழில்மிகு சென்னை இலட்சியத்தை அடைய ஒளிமிகு சென்னையை உருவாக்கிட மின்துறை செயலாற்றி வருகிறது. கடந்த 1996–2001–ஆம் நிதியாண்டுகளில் 20100 எண்ணிக்கையில் புதிய தெருவிளக்குக் கம்பங்கள், 290 கி.மீ. நீள புதைமின்வடங்கள், 39 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைத்திட ரூ.38.30 கோடி செலவிடப்பட்டன. ரூ.10.40 கோடி செலவில் 52000 குழல்விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டன.

2001–2006–ஆம் நிதியாண்டுகளில் ரூ.22.07 கோடி மதிப்பீட்டில் 11000 எண்ணிக்கையில் தெரு மின்விளக்குக் கம்பங்கள், 346 கி.மீ. நீள புதை மின்வடங்கள், 17 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கப்பட்டன.





2006–2008–ஆம் நிதியாண்டுகளில் ரூ.17.42 கோடி மதிப்பீட்டில் 4962 எண்ணிக்கையிலான புதிய தெருவிளக்குகள் அமைக்கப்பட்டும், 2183 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மாற்றியமைக்கப்பட்டும், 257 கி.மீ. கம்பிவடங்கள் மாற்றியமைக்கப்பட்டும், 15 எண்ணிக்கையில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கப்பட்டும் உள்ளன. மயானங்களில் எரிவாயு தகனமேடைகள் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிதியாண்டில் ரூ.35.00 கோடிகளுக்கான மதிப்பீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூ.12 கோடிகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன.

## வருவாய்த்துறை




சொத்துவரி வசூலில் 'பிளாக் பெரி' என்னும் கருவி மூலம் வரி செலுத்த வேண்டிய தொகை, நிலுவைத் தொகை விவரங்களை 3 விநாடிகளில் கண்டறிந்து ப்ளூடூத் பிரிண்டர் மூலம் உரிமையாளருக்கு வழங்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

விரைவில் 'ஆட்டோமேடிக் டெல்லர் கருவி' அமுல்படுத்தப் படவுள்ளது. இக்கருவி மூலம் சொத்துவரி பற்றிய அனைத்து விவரங்களையும் உடனுக்குடன் பொதுமக்கள் தெரிந்து கொள்ளலாம்.

எஸ்.எம்.எஸ். டெக்னாலஜி முறை மூலம் சொத்துவரி பற்றிய அறிவிப்புகள் அனுப்பப்பட்டு விரைந்து வரி வசூலிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வியாபாரிகள் உரிமம் புதுப்பிக்கவும், உரிமம் பெறவும், ரூ.20/– மதிப்பிலான உறுதிமொழிப் பத்திரம் செலுத்தினால் உடனடியாக உரிமம் புதுப்பித்துத் தரப்படும். இதனால் கூடுதலாக வருமானம் பெருகும் வாய்ப்புள்ளது.

சொத்துவரி பெயர் மாற்றும் விண்ணப்பம், சொத்துவரி பிரிப்பதற்கான விண்ணப்பம், உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் போன்றவை இலவசமாகவே வழங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.



சென்னையில் 10 மண்டலங்களிலும் வரி வசூலிக்கும் கட்டடங்கள் ரூ.55 இலட்சம் செலவில் நவீனமுறையில் கட்டப்பட்டு வருகிறது.

'மக்களைத் தேடி மாநகராட்சி' என்ற முகாம் 1,4,5,9,10 ஆகிய மண்டலங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இம்முகாம் மூலம் மாநகராட்சியின் சேவை, குடிநீர் வடிகால் வாரியச் சேவை, மின் வாரியச் சேவை, தாசில்தார் அலுவலகச் சேவை போன்றவை ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் வழங்கப்பட்டு மக்களின் குறைகள் ஒரே நாளில் தீர்க்கப்பட்டு பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பை இத்திட்டம் பெற்றுள்ளது.

## திடக்கழிவு மேலாண்மைத்துறை

எழில்மிகு சென்னையை உருவாக்கிட திடக்கழிவு மேலாண்மையின் பணி முக்கிய இடம் வகிக்கிறது. திடக்கழிவுகளைத் தரம் பிரித்தல், சேகரித்தல், சேர்த்து வைத்தல், போக்குவரத்துச் செய்தல், அவைகளைக் களைதல் இவற்றின் முக்கியப் பணிகளாகும். திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக ரூ.255.32 கோடிக்கு மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நான்கு குப்பை மாற்று நிலையங்கள் நவீன முறையில் கட்டுவதற்கு ரூ.8 கோடி மதிப்பீட்டிலும், 80 எண்ணிக்கை குப்பையை நெருக்கி அழுத்தி எடுத்துச் செல்லும் வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.15.25 கோடி மதிப்பீட்டிலும், கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தில் தரைப்பாலம் அமைக்க ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிலும், பெருங்குடியின் குப்பைக் கொட்டும் வளாகத்தின் சுற்றுச்சுவர் அமைக்க ரூ.1.2 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.







குப்பையைத் தரம் பிரித்தலின் அவசியத்தைப் பொதுமக்களுக்கு உணர்த்த ரூ.2.3 இலட்சம் மதிப்பீட்டில் கைஒலிப்பெருக்கிகள் 155 கொள்முதல் செய்து பயன்படுத்தப்படுகின்றன. குப்பையை நெருக்கி எடுத்துச் செல்லும் வாகனங்களில் பயன்படுத்த 2400 எண்ணிக்கை, உயர் அழுத்த பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் ரூ.2.67 கோடி செலவில் கொள்முதல் செய்து பயன்படுத்தப்படுகின்றன. இந்நடவடிக்கைகள் சென்னையை எழில் மிளிரும் சென்னையாக மாற்றும் நடவடிக்கைகள் ஆகும்.

## நகரமைப்பு

சென்னை மாநகரில் அமைந்துள்ள கட்டடங்களை ஒழுங்குபடுத்தி அழகுபடுத்தும் வழிகாட்டு நோக்குடனும் மக்கள் பயன்பெறும் வகையிலும் கட்டடம் கட்ட அனுமதியை விரைந்து வழங்கும் “பசுமை வழி” (Green Channel ) திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் விண்ணப்பம் பெறப்பட்ட 15 நாட்களுக்குள் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும். குடிநீர், கழிவுநீர், மின்சார இணைப்புகளுக்கான அனுமதிகளும் உடன் வழங்கப்படும்.

கட்டட வரைபடங்கள் இனி கணினிகள் மூலம் தானியங்கி கூர்ந்தாய்வு முறையில் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி விரைந்து வழங்கப்படும். 500 சதுர அடிகள் நிலத்திற்கும் கட்டட வரைபடம் அனுமதி வழங்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தனியார் தெருக்கள், முட்டுசந்துகள் ஆகியவற்றைச் சட்ட விதிகளின்படி மாநகராட்சி எடுத்துக் கொண்டு சாலைவசதி, தெரு மின்விளக்கு அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

## சிறுசேமிப்புத்துறை

'இன்றைய சேமிப்பு நாளைய வாழ்க்கையின் பாதுகாப்பு' என்பதைக் கருத்தில் கொண்டு சேமிப்பைக் கொண்டு வந்து சேர்க்கும் முகவர்களுக்குத் தமிழகத்திலேயே முன்மாதிரியாக சென்னை மாவட்டத்தில் 100 சதவிகிதம் முழுமையாக ஊக்கத்தொகை, விண்ணப்பம் சமர்ப்பித்த அனைத்துச் சிறுசேமிப்பு முகவர்களுக்கும் அவரவர் சேமிப்பு வங்கிக்கணக்கில் மின்னணு மூலம் ( Through ECS ) ஊக்கத்தொகை வரவு வைக்கப்பட்டது.

### சிறுசேமிப்பு முகவர்களுக்குக் குழுக்காப்பீட்டுத் திட்டம்

**2008–2009** நிதியாண்டில் சிறுசேமிப்பு முகவர்களுக்கு அவர்தம் பங்களிப்போடு அரசு மானியத்துடன் ஒரு குழுக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

### சிறுசேமிப்பு வசூலின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊக்கத்தொகை

சிறுசேமிப்பு வசூலின் அடிப்படையில் அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கிய ஊக்கத்தொகை 2005–06ல் ரூ.701.38 இலட்சங்களாகவும், 2006–07ல் ரூ.131 இலட்சங்களாகவும் இருந்தன. இத்தொகை பள்ளிகள், விடுதிகள், சத்துணவு மையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றின் கட்டடங்களைப் புதுப்பித்தல், குடிநீர் விநியோகம், சாலை சீரமைப்புப் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. ரூ.122.53 இலட்சங்கள் மதிப்பீட்டில் நகரின் 6 சாலைகள் சீர்படுத்தப்பட்டன.

2005–06ஆம் நிதியாண்டிற்குச் சென்னை மாநகரின் சிறந்த அஞ்சலகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பூங்காநகர்' தலைமை அஞ்சலகத்தின் தலைமை அஞ்சலக அலுவலருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 5.6.2007 அன்று கேடயம் வழங்கினார்.

## பொதுத்துறை




கடந்த இரண்டாண்டுகளில் கருணை அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு முதல்கட்டமாக 18.3.2008 அன்று 500 நபர்களுக்கு 3 மற்றும் 4ம் நிலை பணியிடங்களும், இரண்டாம் கட்டமாக 2.7.2008 அன்று 2025 துப்புரவுப் பணியிடங்களும், மூன்றாம் கட்டமாக 24.08.2008 அன்று 240 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் கல்வித்துறையில் 89 ஆசிரியர் பணியிடங்கள், 4 இளநிலைப் பயிற்சி அலுவலர்கள், சுகாதாரத்துறை மூலம் மருத்துவ அலுவலர், மருந்தாளுநர்கள் என 90 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியில் தினக்கூலி பணியாளர்கள்/ சாலைப்பணியாளர்கள்/ மலேரியா தூர்வாரும் பணியாளர்கள்/ மலேரியா பணியாளர்கள்/ மயான உதவியாளர்கள் என 229 பணியாளர்களின் பணிகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன.







தினக்கூலி தொழில்நுட்ப உதவியாளராகப் பணிபுரிந்து வந்த 48 பணியாளர்களுக்குக் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியாணைகளும் வழங்கப் பட்டுள்ளன. பதவி உயர்வுகள் மூலம் 1123 காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 13.5.2006 அன்று காலியாக இருந்த 7523 பணியிடங்களில் இதுவரை 4344 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

## மண்டலங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள்

### மண்டலம்–1

கடந்த இரண்டாண்டுகளில் புதிய மாமன்றம் பொறுப்பேற்றமைக்குப் பிறகு சாலைப்பணி, பூங்காப்பணி, சத்துணவுக்கூடப் பணி என மொத்தம் 878 பணிகள் ரூ.36.24 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.



## மண்டலம்–2

உட்புறச்சாலைகள், பூங்காக்கள், மழைநீர் வடிகால்வாய்கள், சத்துணவுக் கூடம் போன்ற பணிகள் என மொத்தம் **503** பணிகள் ரூ.**1149.39** இலட்சங்களில் முடிக்கப் பட்டுள்ளன.





## மண்டலம்–3

சாலைப்பணிகள், அங்கன்வாடி, திறந்தவெளிக் கலையரங்கம், உடற்பயிற்சிக் கூடம், பூங்காக்கள் போன்ற பணிகள் என மொத்தம் **411** பணிகள் ரூ.**65.90** கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

## மண்டலம்–4

தார்ச்சாலைப் பணிகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைப்பணிகள், பூங்காப்பணிகள் என மொத்தம் **621** பணிகள் ரூ.**31.12** கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.



## மண்டலம்–5

தார்ச்சாலைப் பணிகள், நடைபாதைப் பணிகள், பூங்காக்கள், உடற்பயிற்சிக்கூடம், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டப்பணிகள் என மொத்தம் **983** பணிகள் ரூ.**4278.96** இலட்சங்களில் முடிக்கப்பட்டுள்ளன.



## மண்டலம்–6

உட்புறச்சாலை புதுப்பிக்கும் பணிகள், சத்துணவுக்கூடப் பணிகள், பூங்காப்பணிகள், மாநகராட்சித் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் மேம்படுத்தும் பணி என மொத்தம் **304** பணிகள் ரூ.**888.39** இலட்சங்களில் முடிக்கப்பட்டுள்ளன.



## மண்டலம்–7

உட்புறச்சாலைகள், நடைபாதை பணிகள், சமூகநலக்கூடம் கட்டும் பணிகள், சத்துணவுக்கூடங்கள், பூங்காப்பணிகள், திறந்தவெளிக் கலையரங்கம் கட்டியமை போன்ற 202 பணிகள் ரூ.971.80 இலட்சங்களில் முடிக்கப்பட்டுள்ளன.



## மண்டலம்–8

2006 முதல் இதுநாள் வரை சாலைப்பணிகள், சத்துணவுக்கூடக் கட்டடங்கள் கட்டுதல், பொதுக் கழிப்பிடக் கட்டடங்கள் கட்டுதல், மழைநீர் வடிகால்வாய்கள், பூங்கா, விளையாட்டுத்திடல் அமைத்தல் பணிகள் என மொத்தம் 966 பணிகள் ரூ.3386.82 இலட்சங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.





### மண்டலம்–9

2006 முதல் 2008 வரை தார்ச்சாலைகள் அமைத்தல், மயானபூமிகளை மேம்படுத்தல் , விளையாட்டுத்திடல், மழைநீர் வடிகால்வாய் பணிகள் என மொத்தம் 481 பணிகள் ரூ.1694.67 இலட்சங்களில் முடிக்கப் பட்டுள்ளன.

### மண்டலம்–10

அக்டோபர் 2006 முதல் ஆகஸ்டு 2008 வரை சாலைகள், சத்துணவுக்கூடங்கள், பூங்கா அமைத்தல், பொதுக்கழிப்பிடம், மழைநீர் வடிகால்வாய் என மொத்தம் 678 பணிகள் ரூ.3450.73 இலட்சங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.28,45,900 மதிப்பீட்டில் உயர்கோபுர மின்விளக்குகள் பெசன்ட் நகர், வேளச்சேரி, தரமணி, பெருங்குடி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.






சென்னை உஸ்மான் சாலை - மகாலிங்கபுரம் சாலை மேம்பாலத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.



சென்னை வள்ளுவர்கோட்டம் எதிரில் புதிய பூங்கா




சென்னை மாநகராட்சி 320ஆம் ஆண்டு விழா மலரை
மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
வெளியிட்டார்.